(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 3(7).]

# பாராளுமன்றம்

## 3 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2011, யூலை 01, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2011, யூலை 19, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0449/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வர்த்தக வங்கிகள் பற்றிய அரசாங்கத்தின் கொள்கை பற்றியும்;

(ii) தனியார் வங்கிகளில் அரசாங்கம் பங்குகளைக் கொள்வனவு செய்கின்றதா என்பது பற்றியும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இன்றுள்ளவாறாக, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (ஊ.ந.பொ.நி) அல்லது வேறு ஏதேனும் அரச நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட தனியார் வங்கிகளின் பங்குக் கொள்வனவின் மொத்த அளவையும்;

(ii) ஒவ்வொரு வங்கியிலிருந்தும் கொள்வனவு செய்யப்பட்ட பங்குகளின் சதவீதத்தையும், செலுத்தப்பட்ட மொத்த கிரயத்தை, அத்தகைய கொள்வனவு மேற்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து வெவ்வேறாக ஆண்டுவாரியாகவும்;

(iii) பங்கு விலைகள் வீழ்ச்சியடைந்தால், பங்குக் கொள்வனவில் ஏற்படும் இடர்களை ஏற்பது யார் என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0862/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நூல் வெளியீட்டு உதவிக் கருத்திட்டம் எனப்படும் எழுத்தாளர் உதவிக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்,

(ii) ஆரம்பம் தொடக்கம் இன்றுவரை மேற்படி கருத்திட்டத்திற்காக ஒவ்வொரு வருடத்திற்கும் அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட நிதி தனித்தனியே எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் உதவியைப் பெற்றுக்கொண்ட எழுத்தாளர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்திற்கேற்ப யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது மேற்படி கருத்திட்டத்தின் செயற்படுநிலை யாதென்பதையும்,

(ii) எழுத்தாளர்களுக்கு மாபெரும் உறுதுணையாகவிருந்த இக்கருத்திட்டம் அடிக்கடி செயலிழப்பதைத் தடுப்பதற்கான நிரந்தர அடித்தளமொன்றை இடுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iii) ஆமெனில், எத்திகதியில் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1097/ '11

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக தென் மாகாண சபையினால் 2007ஆம் ஆண்டு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நியமனங்கள் வழங்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் ஒவ்வொரு பட்டதாரியினாலும் பெறப்பட்டுள்ள புள்ளிகள் தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆசிரியர் நியமனங்களைப் பெற்றுள்ளோரின் பெயர்கள் மற்றும் அவர்கள் பெற்றுள்ள புள்ளிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டிருந்த நிபந்தனைகள் யாவையென்பதையும்;

(ii) நியமனங்களை வழங்கும்போது முன்னர் உத்தேசிக்கப்பட்டிருந்த நிபந்தனைகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி மாற்றத்தின் காரணமாக மேற்படி பரீட்சையில் மேல்மட்ட பெறுபேறுகளைப் பெற்ற பட்டதாரிகளுக்கு இழைக்கப்படும் அநீதியைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1217/ '11

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

1375/ '11

கௌரவ வசந்த அளுவிஹாரே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ளை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள, ரங்கிரி தம்புள்ளை மத்திய மகா வித்தியாலயம் ஒரு தேசிய பாடசாலையாகும் என்பதையும்;

(ii) அங்கு சுமாராக 2500 மாணவர்கள் கல்வி பயில்கிறார்கள் என்பதையும்;

(iii) தற்போது அப்பாடசாலையில் ஏராளமான குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) அப்பாடசாலையில்,

(i) கல்வி கற்கும் மாணவர் தொகைக்கு ஏற்ப, தற்போது அவசியமாகவுள்ள 12 புதிய வகுப்பறைகளை நிர்மாணிப்பதற்கும்;

(ii) நடன/சங்கீத/சித்திரப் பிரிவுகளை நடத்திச் செல்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும்;

(iii) பாதுகாப்பு மதிலின் மீதிப் பகுதியை அமைத்துக் கொடுப்பதற்கும்;

(iv) விளையாட்டு மைதானத்தை ஒழுங்காக அமைத்துக் கொடுப்பதற்கும்;

(v) மலசலகூடத் தொகுதியை அமைத்துக் கொடுப்பதற்கும்;

(vi) பாடசாலை மாணவர்களுக்கும் கருவிகளுக்கும் குரங்குகளால் ஏற்படும் பாதிப்பை தடுப்பதற்கு, வகுப்பறைகளை வலையிட்டு மறைப்பதற்கும்

நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) அவ்வாறாயின், மேற்படி குறைபாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு எவ்வளவு காலம் தேவைப்படும் என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல்,ஏன்?

1427/ '11

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாகாண சபைகளின் இறைவரித் திணைக்களங்கள் அறவிட்டு வந்த விற்பனைப் புரள்வு வரி 2011 வரவு செலவுத் திட்டம் மூலமாக இல்லாதொழிக்கப்பட்டமை காரணமாக தற்போது மாகாண சபைகளின் இறைவரித் திணைக்களங்களில் சேவையாற்றுகின்ற அலுவலர்களுக்குப் பயனுறுதிமிக்க கடமையொன்று இல்லையென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) நிதி அமைச்சின் செயலாளரது பணிப்புரையின் பிரகாரம் மாகாண இறைவரிச் சேவைப் பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவினால் 2011.03.04 ஆம் திகதி வழங்கப்பட்ட பரிந்துரையின் பிரகாரம் மாகாண இறைவரி அலுவலர்கள், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு உள்ளீர்க்கப்படுவார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக் கழியும் காலம் யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) அவ்வாறின்றேல், தற்போது எவ்விதமான கடமைகளும் இன்றி மாகாண சபைகளின் இறைவரித் திணக்களங்களில் உள்ள போட்டிப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் மாகாண சபைகளின் இறைவரித் திணைக்களங்களுக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட 372 பட்டதாரிப் பதவிநிலைத் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் தொழிற் பிரச்சினை சம்பந்தமாக அரசாங்கம் வழங்குகின்ற தீர்வு யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0768/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 முதல் 2010 வரையிலான காலப்பகுதியில் உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு மாணவர்களது எண்ணிக்கையை நாடுகள் மற்றும் வருடவாரியாக வெவ்வேறாகவும்;

(ii) அவர்கள் எந்தெந்த கற்கைநெறிகளுக்கு அனுமதிக்கப்பட்டார்கள் என்பதையும்;

(iii) மேற்படி மாணவர்கள் மூலம் இலங்கைக்கு கிடைக்கப்பெற்ற அந்நியச் செலாவணியை வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாகவும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு மேலும் அதிகளவு மாணவர்களை ஈர்க்க மாற்று நிகழ்ச்சித்திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படுமா என்பதையும் அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு வெளிநாட்டு மாணவர்கள் அனுமதிக்கப்படுவதன் காரணமாக வாய்பிழக்கும் உள்நாட்டு மாணவர்களின் எண்ணிக்கையையும்;

(ii) இப்பிரச்சினை எவ்வாறு தீர்க்கப்படும் என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல். ஏன்?

0985/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை துறைமுக அதிகாரசபையின், திருகோணமலை துறைமுகத்தில் பாவனைக்கு எடுக்கக்கூடிய ஒரு தொகுதி இரும்பு 2010 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் முதற் பகுதியில் கேள்விப்பத்திர நடைமுறைக்கு புறம்பாக விற்பனை செய்யப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறாயின் அந்த ஒரு தொகுதி இரும்பைக் கொள்வனவு செய்த நிறுவனம் அல்லது நபர் யாரென்பதையும்;

(ii) மேற்படி இரும்புத்தொகுதியின் நிறை யாதென்பதையும்;

(iii) மேற்படி இரும்புத் தொகுதியின் விற்பனையிலிருந்து இலங்கை துறைமுக அதிகாரசபைக்குக் கிடைத்த பணத்தொகை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) விற்பனை செய்யப்பட்ட மேற்படி இரும்புத் தொகுதியை அகற்றும் போது துறைமுகத்தினுள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் நடைமுறைப்படுத்தப்படும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறைக்கு இயைபாக செயற்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் அதனுடன் சம்பந்தப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இந்தக் கொடுக்கல் வாங்கலில் நிதி மோசடி இடம்பெற்றுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(உ) அவ்வாறாயின், அதில் சம்பந்தப்பட்டள்ளவர்களுக்கு எதிராக எடுக்கவிருக்கும் நடவடிக்கை யாதென்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

1218/ '11

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

1377/ '11

கௌரவ வசந்த அலுவிஹாரே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2001ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மாத்தளை சிறிமாவோ பண்டாரநாயக்க மாதிரி ஆரம்பப் பாடசாலையுடன் இணைக்கப்பட்டு தற்போது இரண்டாம் நிலைப் பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதையும்;

(ii) மேற்படி இரண்டாம் நிலைப் பிரிவு தொடர்பாக பெற்றோர் மத்தியில் குழப்பமான நிலைமையொன்று காணப்படுவதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலையின் இரண்டாம் நிலைப் பிரிவுக்காக நிர்மாணிக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடம் தொடர்பான முழுமையான தகவல்கள் அடங்கிய அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) மேற்படி கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு செலவு செய்யப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) தற்போது கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் முழுமையாக நிறைவுச் செய்யபப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆரம்ப நிலைப் பிரிவுக்கும் இரண்டாம் நிலைப் பிரிவுக்குமிடையிலான தூரம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) (i) இவ்விரண்டு பிரிவுக்கிடையிலும் நிர்மாணிக்கப்படும் பிரவேசப் பாதையில் பாலம் அமைத்தல், படிக்கட்டுகளை அமைத்தல், மற்றும் பாதைக்கு கொங்கிரீட் இட்டு செப்பனிடல் போன்றவற்றுக்காக செலவுச் செய்யப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி பாதையின் நிர்மாணப் பணிகள் உரிய தரத்தை கொண்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) மேற்படி பாடசாலையின் இரண்டாம்நிலைப் பிரிவை வேறு பெயரில் அழைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அப் பெயர் யாதென்பதையும்;

(iii) இரண்டாம்நிலைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ள இடத்தில் பிள்ளைகளுக்கு போதிய பாதுகாப்பு உண்டா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0769/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியினுள் சமர்ப்பிக்கப்பட்ட குறைநிரப்பு மதிப்பீடுகளின் எண்ணிக்கையையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு குறைநிரப்பு மதிப்பீட்டையும் சமர்ப்பித்த அமைச்சுக்களின் பெயர்களையும் அவற்றின் தொகைகளையும் வெவ்வேறாகவும்;

(iii) மேற்படி குறைநிரப்பு மதிப்பீடுகளின்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தின் மொத்தத் தொகையையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) மேற்படி குறைநிரப்புச் செலவினங்கள் ஏன் முன்கூட்டியே திட்டமிடப்படவில்லை என்பதை அவர் தெரிவிப்பாரா?

(இ) குறைநிரப்பு மதிப்பீடுகளின் மொத்தப் பெறுமதியை மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிட்டுக் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0986/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்வித் திணைக்களத்தின் கீழ் காணப்படும் நூல் வெளியீட்டுப் பிரிவினால் 2010 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ள நூல்கள் யாவை என்பதையும்;

(ii) அவற்றில் க.பொ.த. உயர் தர புவியியல் பாடத்திற்கு ஏற்புடையதாக வெளியிடப்பட்டுள்ள நூல்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அத்தகைய நூல்களில் சம்பந்தப்பட்ட பாடத்திட்டம் பாடசாலைகளிலிருந்து நீக்கப்பட்ட பின்னர் வெளியிடப்பட்டுள்ள நூல்கள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(iv) அவ்வாறாயின் அத்தகைய நூல் அல்லது நூல்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) அதற்கென செலவிடப்பட்டுள்ள தொகை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1219/ '11

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

1378/ '11

கௌரவ வசந்த அலுவிஹாரே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கே (K) வகைப் பாடசாலைகளில் அதிபர் பதவிக்கு இலங்கை அதிபர் சேவையின் தரம் 1ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களை நியமிக்கவேண்டும் என்பதையும்;

(ii) அவ்வாறல்லாத சந்தர்ப்பங்களில் அதிபர் சேவையின் தரம் 2ஐச் சேர்ந்த ஒருவரை நியமிக்க வேண்டும் என்பதையும்;

(iii) எனினும், மாத்தளை கல்வி வலயத்தினுள் K வகைப் பாடசாலைகள் சிலவற்றில் அதிபர் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக ஆசிரியர் சேவையில் உள்ளவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) K வகைப் பாடசாலைகளில் அதிபர் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஆசிரியர் சேவையில் உள்ள ஒருவர் நியமிக்கப்படுவதை அனுமதிக்கிறீர்களா என்பதையும்;

(ii) இன்றேல், அவ்வாறானதொரு நியமனம் தொடர்பாக எடுக்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) தற்போது (அ)(iii) இல் தெரிவிக்கப்பட்டுள்ள நியமனங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ள அடிப்படை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) அதிபர் சேவையில் தரம் 1ஐச் சேர்ந்த உத்தியோகத்தரான திருமதி ஆர்.எம். யு. எஸ்.எஸ். ராஜகருணாவுக்கு பாடசாலையொன்றை வழங்காது கல்விக் காரியாலயத்திற்கு இணைக்கப்பட்டுள்ளாரென்பதை அவர் அறிவாரா?

(ஈ) ஆமெனில், மேற்படி அதிபருக்கு நீதியை நிலைநாட்ட எடுக்கும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல் ஏன்?

## 2011, யூலை 20, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0454/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிர்மாணம், பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கை சனாதிபதி 2010, யூன் 8 முதல் 10 வரையான காலப்பகுதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த போது, தமிழ் மக்களுக்காக 50,000 வீடுகளைக் கட்டுவதற்கு 24 பில்லியன் ரூபாவினை வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் இணங்கியதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி இற்றைவரையில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையினையும்;

(ii) அவை கட்டப்பட்டுள்ள இடங்களையும் அவற்றைப் பெற்றுக்கொண்டவர் களின் பெயர்களையும்;

(iii) வீடுகளின் நிர்மாணத்திற்கு முன்னதாக வழங்கப்பட்ட இந்தியாவினால் வழங்கப்பட்ட பணத்தொகையையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) புதிய வீடுகளை வழங்குவதற்காக உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரைத் தெரிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் அடிப்படையையும்;

(ii) அவர்கள் தமிழர்களா, முஸ்லிம்களா அல்லது சிங்களவர்களா என்பதையும்;

(iii) உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் அனைவரையும் குடியமர்த்துவதற்கு இன்னும் தேவைப்படுகின்ற வீடுகளின் எண்ணிக்கையையும்

அவர் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0918/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சேனானிகல பிரசேத்தில் குடியமர்த்துவதற்கு தீர்மானித்துள்ள பழங்குடிக் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இற்றைவரை குடியமர்த்தியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) மேற்படி குடும்பங்களுக்குச் சொந்தமான ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) ஒவ்வொரு குடும்பத்திற்கும் எவ்வளவு காணி வழங்கப்படுவதற்கு விதத்துரைக்கப்பட்டுள்ளதென்பதையும்,

(v) இற்றைவரை இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அல்லது வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள காணியின் அளவு எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) பழங்குடிக் குடும்பங்களுக்காக சேனானிகல பிரதேசத்தில் வழங்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள காணிகளை இவர்களுக்கு பெற்றுக்கொடுக்காமல் இருப்பதற்கான வேலைத்திட்டமெதுவும் உள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1220/ '11

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக வெகுசன ஊடக, தகவல் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0773/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010.06.29 இல் விநியோகிக்கப்பட்ட நிதி முகாமைத்துவ அறிக்கையின் பிரகாரம் கிரேலைன் இன்நெஷனல் பிரைவேட் லிமிரெற்றிற்கு ரூ.400 மில்லியனுக்கான வங்கி உத்தரவாதம் வழங்கப்பட்டது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி அறிக்கையின் பிரகாரம்,

(i) அவ் வங்கி உத்தரவாதம் ஏன் வழங்கப்பட்டது என்பதையும்;

(ii) பிரதி உபகாரமாக கிடைத்த நன்மைகள் என்னவென்பதையும்;

(iii) அப் பொறுப்பு எப்போது விடுவிக்கப்படும் என்பதையும்;

(iv) கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் (சி.டபிள்யூ.ஈ) அரச வர்த்தக லிமிரெற் அல்லது அரச வர்த்தக கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்ட ரூ. 4200 மில்லியன் வங்கி உத்தரவாதம் ஏன் விடுவிக்கப்படவில்லையென்பதையும்;

(v) மேற்படி உத்தரவாதங்கள் இருப்பதனால் கிடைக்கின்ற நன்மைகள் என்னவென்பதையும்;

(vi) இலங்கை மின்சார சபையை மேலும் கடனுக்கு இட்டுச் செல்லும் இலங்கை மின்சார சபையுடன் தொடர்புடைய கருத்திட்டங்களுக்கு ரூ. 120 பில்லியன் வங்கி உத்தரவாதம் வழங்கப்பட்டதா என்பதையும்;

(vii) இந்நிலைமைய சீர்செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்னவென்பதையும்;

(viii) மக்கள் வங்கியின் ஓய்வூதிய நிதியத்திலிருந்து அரசாங்கத்தினால் பணம் எடுக்கப்பட்டமைக்கான காரணங்கள் என்னவென்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

0987/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நேர்மையான செயல்திறன் மிக்க பொலிஸ் உத்தியோகத்தர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தில் 2005 ஆம் ஆண்டு முதல் இதுவரை காலமும் வழங்கப்பட்டுள்ள பண அன்பளிப்புத் தொகை எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நோக்கத்துடன் பண அன்பளிப்பு வழங்கும் செயற்பாடு தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி ஊக்குவிப்புத் தொகை நிறுத்தப்பட்டமையினால் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஊக்கமிழந்துள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) பண அன்பளிப்பு வழங்குதல் நிறுத்தப்பட்டு எவ்வளவு காலமாகின்றதென்பதையும்;

(ii) மேற்படி அன்பளிப்புத் தொகையை பெறுவதற்கு தகைமைப் பெற்றுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி உத்தியோகத்தர்களுக்கு அன்பளிப்புத் தொகை வழங்கும் திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில் ஆதற்காக எவ்வளாவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1221/ '11

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக சிவில் விமானச் சேவைகள் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0850/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை மத்திய அரசாங்கம், மாகாண சபைகள், நகரசபைகள் என்பவற்றில் வீதி நிர்மாணங்கள் மற்றும் பராமரிப்பிற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தொகைகளை வருடவாரியாக வெவ்வேறாகவும்;

(ii) 2006 ஆம் அண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை அனைத்து வகையான வீதி வகைகளுக்குமென மேற்படி மூன்று அமைப்புகளுக்கும் ஏற்பட்ட மொத்தச் செலவீனத்தையும்;

(iii) 2012 ஆம் ஆண்டில் வீதி நிர்மாணம் மற்றும் பராமரிப்பிற்கென ஒதுக்கீடு செய்யப்படவுள்ள பணத்தொகையையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) (அ) (i) இல் குறிப்பிட்ட வீதி நிர்மாணம் மற்றும் பராமரிப்பிற்கான நிதி மூலங்களையும்;

(ii) அது ஒரு கடன் மூலதனம் எனின், கடன்பெறும் செலவீனம் மற்றும் கடன்வழங்கும் நாடுகள் அல்லது நிறுவனங்களின் பெயர்களையும்

அவர் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) 2006, 2007, 2008, 2009, 2010 ஆகிய ஆண்டுகளில் முடிவுறுத்தப்பட்ட வீதி நிர்மாணங்களுக்கென அரசாங்கம் தனியார் ஒப்பந்தக்காரர்களுக்குச் செலுத்திய பணத்தொகையை அவர் அறிவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

1000/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தொழில், தொழில் உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் (E.T.F.) இதுவரை வைப்புச் செய்துள்ள பணம் எவ்வளவென்பதையும்;

(ii) இதில் அங்கத்துவம் பெற்றுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) அங்கத்தவர்களின் பணத்திற்காக வழங்கப்படுகின்ற வருடாந்த வட்டி வீதம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இப்பணத்தை அங்கத்தவர்களுக்கு மீளச் செலுத்தும் 5 வருட கால எல்லையானது அதைவிட நீண்ட காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளதா,

(ii) இன்றேல், அத்தகைய கால நீடிப்புக்கான திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா,

(iii) மேற்படி (i) அல்லது (ii) மேற்கொள்ளப்பட்டிருப்பின், அதற்கு ஏதுவான காரணங்கள் யாவை,

(iv) இதன்பொருட்டு தொழில் ஆலோசனை மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) குறுகிய காலத்தேவைகளை ஈடேற்றிக் கொள்வதற்காக ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் பணத்தைப் பாவிக்கின்ற ஊழியர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களுக்காக வழங்கப்படும் தீர்வு யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1222/ '11

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— அரசாங்க முகாமைத்துவ, மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக அரசாங்க முகாமைத்துவ, மறுசீரமைப்பு அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

# 2011, யூலை 21, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0479/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் வகிபாகம் யாதென்பதையும்;

(ii) பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் விசாரிக்கப்பட்டு வரும் சட்ட விரோத கொடுக்கல் வாங்கல் விவகாரங்களின் எண்ணிக்கையையும்;

(iii) விசாரணை மேற்கொள்ளப்பட்ட வழக்குகள் மற்றும் அவற்றின் பெயர்கள் என்பவற்றையும்;

(iv) விசாரணைகளின் இற்றை வரையிலான பெறுபேறுகள் யாதென்பதையும்;

(v) வழக்குகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளனவா அல்லது அபராதம் விதிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) விதிக்கப்பட்ட அபராதத் தொகைகளையும் ஒவ்வொரு வழக்கும் எப்போது தீர்த்து வைக்கப்பட்டது என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0922/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த 6 வருட காலப்பகுதியில் தரத்தில் குறைந்த மருந்துகளை இறக்குமதி செய்த கம்பனிகளென இனங்காணப்பட்டுள்ள கம்பனிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அக் கம்பனிகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) இந்த ஒவ்வொரு கம்பனியும் தரத்தில் குறைந்த மருந்துகளை இறக்குமதி செய்ததன் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

(iv) ஒவ்வொரு கம்பனியும் அரசாங்கத்திற்கு மீளச் செலுத்தியுள்ள பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தரத்தில் குறைந்த மருந்துகளை இறக்குமதி செய்ததாக இனங்காணப்பட்டுள்ள ஒவ்வொரு கம்பனியினதும் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையைச் சேர்ந்தோரின் பெயர்களும் முகவரிகளும் யாவையென்பதையும்,

(ii) இக்கம்பனிகளில் தற்போது கறுப்புப் பட்டியலில் (Black List) இடப்பட்டு தடைசெய்யப்பட்டுள்ள கம்பனிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(iii) அந்த கம்பனிகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iv) மேற்படி தடைசெய்யப்பட்டுள்ள கம்பனிகளிலிருந்தும் 2006 தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் மீண்டும் மருந்துகளை கொள்வனவு செய்துள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

1223/ '11

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— வினைத்திறன் மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக வினைத்திறன் மேம்பாட்டு அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0851/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 ஆம் 2010 ஆம் ஆண்டுகளின் உள்நாட்டு அரிசி நுகர்வையும்;

(ii) 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளுக்கான உத்தேசிக்கப்பட்ட நுகர்வையும்;

அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2010 பெப்ரவரி மாதத்தில் 100,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்த அரசாங்க நிறுவனங்களின் பெயர்களையும்;

(ii) அவர் இறக்குமதிக்கான நிதிமூலத்தையும்;

(iii) மேற்கண்டவாறு இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் இறக்குமதி விலை விற்பனை விலை, விற்பனை செய்யப்பட்ட அளவு கையிருப்பில் உள்ள அளவு ஆகியவற்றையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் விலை கிலோ ஒன்றிற்கு இலங்கை ரூபா 65/- இற்கு மேற்பட்டதாக இருக்கையில் மேற்கண்டவாறு இறக்குமதி செய்யப்பட்ட அண்ணளவாக 30,000 மெற்றிக் தொன் அரிசி தனியார் துறையினருக்கு கிலோ ஒன்றிற்கு இலங்கை ரூபா 31 எனும் விலையில் 2010, செத்தெம்பர் மாதத்தில் விற்கப்பட்டதையும்;

(ii) தனியார் வர்த்தகர்கள் அவ் அரிசியை உள்ளூர்ச் சந்தைகளில் விற்பனை செய்யக்கூடாது என அரசாங்கம் வலியுறுத்தியிருந்த போதும் அவர்கள் அதை விற்பனை செய்துள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஈ) மேற்கூறியவாறு அரிசியை விற்பனை செய்த தனியார் வர்த்தகர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல் ஏன்?

1001/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாண அரச வைத்தியசாலைகளில் பணி புரியும் தாதிமார்கள் மற்றும் அதற்குக் கீழுள்ள பதவிகளில் நிரந்தர சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களுக்கு மாதாந்தச் சம்பளமாக வழங்கப்படும் தொகை யாதென்பதையும்;

(iii) மேலதிக நேரக் கொடுப்பனவாக வழங்கப்படும் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2010 நவெம்பர் மாதச் சம்பளத்துடன் ஒற்றோபர் மாதத்துக்காக அவர்களுக்கு வழங்கப்படும் மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்பதையும்;

(ii) இவ்வாறான நிலைமையின் கீழ் ஊழியர்களுக்கு தமது வேதனத்தை மாதாந்தம் முகாமை செய்வதில் சிக்கல் ஏற்படுகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) இவ்வாறு மேலதிக நேரக்கொடுப்பனவு வழங்கல் தாமதமாவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) இந் நிலைமையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(iii) இதற்காகத் தேவைப்படும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1224/ '11

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக தேசிய மரபுரிமைகள் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0852/ ‘10

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 இல் பொதுநலவாய நாடுகளுக்கான விளையாட்டுப் போட்டியை நடத்துவதற்கான முயற்சியில் இலங்கை ஈடுபட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆம் எனில் இந்நோக்கத்திற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்களையும்;

(iii) இவ் விளையாட்டுப் போட்டியை நடத்துவதற்கு விண்ணப்பிப்பதற்கான ஆரம்ப ஒப்புதல் செலவு எவ்வளவு என்பதையும்;

(iv) இவ் விடயம் தொடர்பில் பிரதான வகிபாகத்தை வகிப்பவர் யார் என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இவ் விளையாட்டுப் போட்டியை நடத்துவதற்கான வாய்ப்பு இலங்கைக்கு வழங்கப்படும் பட்சத்தில் மேற்படி விளையாட்டுப் போட்டிகளை நடாத்த எதிர்பார்க்கப்படும் மாவட்டத்தையும் நகரத்தையும்;

(ii) உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பிலான மொத்த முதலீட்டுச் செலவு எவ்வளவு என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) இது தொடர்பிலான வேட்பு மனுக்கள் கோரப்படும் பொழுது இலங்கையின் வேட்பு மனுவை முன்மொழிகின்ற, வழிமொழிகின்ற நாடுகள் எவை என்பதையும்;

(ii) இலங்கையைத் தவிர 2018 இல் பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்காக போட்டியிடுகின்ற ஏனைய நாடுகள் எவை என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

1002/ ’10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக கிடைக்கப்பெற்றுள்ள முறைபாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவற்றில் தீர்வுகள் வழங்கப்பட்டுள்ள முறைபாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தீர்வுகள் வழங்கப்படவுள்ள முறைபாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக முறைபாடுகள் கிடைத்துள்ள நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனம் சம்பந்தமாகவும் கிடைக்கப்பெற்றுள்ள முறைபாடுகளின் எண்ணிக்கை தனித் தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) அதன் பிரகாரம் ஆகக் கூடிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள நிறுவனம் யாதென்பதையும்

அவர்குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1225/ '11

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழிநுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக தொலைத்தொடர்புகள், தகவல் தொழிநுட்பவியல் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

---

## 2011, யூலை 22, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0562/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஹம்பாந்தோட்டை துறைமுகக் கருத்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் ஒப்பந்தக்காரர்களின் பெயர்களையும்,

(ii) கேள்வி பத்திர செயன்முறை மூலமாகவா மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் தெரிவு செய்யப்பட்டனர் என்பதையும்,

(iii) அவ்வாறாயின், கேள்விப்பத்திரதாரர்களின் பெயர்களையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஹம்பாந்தோட்டை துறைமுகக் கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டமானது எப்போது ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்படும் என்பதையும்,

(ii) அதற்கு எவ்வாறு நிதியிடப்படும் என்பதையும்,

(iii) வட்டி மற்றும் நிர்மாணச் செலவு ஆகியவற்றினடிப்படையில் மொத்தச் செலவினையும்,

(iv) அடுத்த 6 வருடங்களுக்கான காசுப்பாய்ச்சல் எதிர்வு கூறலையும்,

(v) மூலதனச் செலவு மற்றும் வட்டிச் செலவு, ஏனைய இயக்குச் செலவுகள் மற்றும் அடுத்த 10 வருடங்களுள் பெறப்படவுள்ள வருமானம் ஆகியவை உள்ளிட்ட காசுப்பாய்ச்சல் கூற்றினை வருட அடிப்படையிலும்

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(இ) (i) ஹம்பாந்தோட்டை துறைமுகக் கருத்திட்ட நிர்மாணச் செலவுகளுக்க எடுத்த கடனை மீளச் செலுத்த கொழும்புத் துறைமுகத்தின் வருமானம் பயன்படுத்தப்படுமா என்பதையும்,

(ii) கடனை மீளச் செலுத்தத் தொடங்க வேண்டிய திகதியினையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0958/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2004.06.04 ஆம் திகதிய 1344 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் பிரகாரம் அனுராதபுரம் இராசதானியில், 400 யார் ஒழுங்குவிதியின் கீழ் எந்தவொரு நிர்மாணத்தையும் மேற்கொள்ளக் கூடாதென சட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளபோதும் அதற்கு முரணான வகையில் அனுமதியற்ற நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறாயின், அந்த நிர்மாணங்கள் யாவை என்பதையும்,

(ii) அதற்காக தொல்பொருளியல் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) ஆமெனில், அவ்வாறானதோர் அனுமதியை வழங்கிய அலுவலரின் பெயர் மற்றும் பதவி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அனுராதபுரம் புனித நகரின் உள் நீர் அகழியை கொங்கிறீட் இட்டு செப்பனிடும் கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொல்பொருளியல் திணைக்களமா இல்லாவிடின் தொல்பொருளியல் திணைக்களத்திலிருந்து அனுமதி பெற்றுள்ள வேறொரு தரப்பினரா என்பதையும்,

(iii) வேறொரு தரப்பினராயின் அவர்கள் யாவர் என்பதையும்,

(iv) மேற்படி கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதன் நோக்கம் யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) தேசிய மரபுரிமை நகரமான அனுராதபுரம் புனித நகரில் மேற்கொள்ளப்படும் இதுபோன்ற தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் தொடர்பாக எடுக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

1202/ '11

கௌரவ எம்.ரி. ஹஸன் அலி,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை ரூபவாகினிக்கூட்டுத்தாபனத்தில் நியமனம் செய்யப்படும் நிரந்தர தயாரிப்பாளர் ஒருவருக்கு இருக்கவேண்டிய அடிப்படைத் தகைமையையும்;

(ii) இலங்கை ரூபவாகினிக்கூட்டுத்தாபனத்தில் தற்போது கடமையாற்றும் நிரந்தர தயாரிப்பாளர்களின் எண்ணிக்கையையும்;

(iii) இலங்கை ரூபவாகினிக்கூட்டுத்தாபனத்தில் தற்போது கடமையாற்றும் அத்தகைய நிரந்தர தயாரிப்பாளர்கள் ஒவ்வொருவரினதும் தகைமைகளை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1226/ '11

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0853/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எமது சில கிரிக்கெட் வீரர்களது நடத்தைகளை ஆதாரமற்ற முறையில் கடந்த காலத்திலும் தற்போதும் தாக்குவதற்கான காரணங்கள் என்னவென்பதையும்;

(ii) அக் கிரிக்கெட் வீரர்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்னவென்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) ஆட்ட நிர்ணயம் தொடர்பில் யாராவது இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கெதிராக சர்வதேச கிரிக்கெட் சபை முறைப்பாடுகள் எதனையும் மேற்கொண்டதா என்பதையும்;

(ii) ஆட்ட நிர்ணயம் தொடர்பில் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருக்கும் சர்வதேச கிரிக்கெட் வீரர்களது பெயர்கள் என்னவென்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) எமது கிரிக்கெட் வீரர்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கமும், "இலங்கை கிரிக்கெட்" சபையும் செயல்வேகத்துடன் தீவிரமாகவும் செயற்படாமைக்கான காரணம் என்னவென்பதையும்;

(ii) எமது கிரிக்கெட் வீரர்களைப் பாதுகாப்பதற்கு எதிர்காலத்தில் எவ்வித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும்;

(iii) எமது கிரிக்கெட் வீரர்களது நற்பெயருக்கு குந்தகம் விளைவிப்பதில் ஈடுபட்டுள்ள பொறுப்பு வாய்ந்த சில வெளிநாட்டு ஊடக நிறுவனங்களுக்கும் ஊடக நிறுவனங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் எதிராக குற்றவியல் அதுறு சட்ட நடவடிக்கைள் ஏன் மேற்கொள்ளப்படவில்லையென்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

1014/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஊடாக இலங்கையின் புகழுருவை உலகில் பிரச்சாரம் செய்வதற்காக குறிப்பிட்ட ஒரு தொகைப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அப்பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இதன் பிரகாரம் மேற்படி நிகழ்ச்சித் திட்டத்திற்காக கேள்விப்பத்திரங்களை முன்வைத்த பிரச்சார நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) அந்த நிறுவனங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனங்களில் "பெல்ட்டெஞ்சர்" எனும் பிரித்தானிய கம்பனியொன்று மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தின் பிரச்சாரத்திற்காக சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள சேவைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட மொத்தப் பணத் தொகையும் ஒவ்வொரு பணிக்காக செலுத்தப்பட்ட பணத்தொகைகளும் தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

1227/ '11

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக விளையாட்டுத்துறை அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாடுகளில் இலங்கை அரசாங்கத்திற்காக வெளிநாடுகளில் பணியாற்றுவதற்காக பொது உறவுகள் கம்பனிகளுடன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு ஒப்பந்தம் செய்து அல்லது அவற்றை அமர்த்தியுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அக்கம்பனிகளின் பெயர்களையும்;

(iii) அவற்றுடன் எப்போது ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது என்பதையும்;

(iv) அவை விலைமனு கோரல் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனவா என்பதையும்;

(v) இன்றேல், ஏன் அவ்வாறு செய்யப்பட்டது என்பதையும்;

(vi) இக்கம்பனிகளுக்கு மாதமொன்றுக்கு செலுத்தப்படும் தொகையை இலங்கை ரூபாவிலும்;

(vii) அவற்றின் சேவையால் கிடைக்கப்பெற்ற நன்மை என்ன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வெளிநாட்டில் பணிபுரிவதற்காக மேலும் பொது உறவுகள் கம்பனிகள் பணிக்கு அமர்த்தப்படுமா என்பதையும்;

(ii) இலங்கைக்காக பணியாற்றும் அமெரிக்காவில் உள்ள குர்விஸ், ஐக்கிய இராச்சியத்தில் உள்ள பெல்பொட்டெஞ்சர், இந்தியாவில் உள்ள லெக்சிகன் ஆகியன பற்றிய விபரங்களையும்;

(iii) இந்தக் கம்பனிகளின் உரிமையாளர்களையும்;

(iv) வெளிநாட்டுக் கொள்கை வகுப்பதிலும் அந்தக் கம்பனிகள் ஈடுபட முயற்சிக்கின்றனவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) மேற்கண்டவாறு வெளி நிறுவனங்களுக்கு அவர்களின் கடமைகளில் ஒன்றை ஒதுக்கிக் கொடுப்பதன் நிமித்தமாக அமைச்சு பணியாட்கள் ஊக்கம் குன்றிப்போவார்கள் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1015/ ’11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011ஆம் ஆண்டுக்காக வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் வீடுகளை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) இந்தப் பணத் தொகையில் கிராமிய வீடுகள், அரசாங்க வீடுகள், மாடிவீடுகள் என்பவற்றை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறிய வீடமைப்புத்திட்டங்களுக்கு பலதரப்பட்ட நாடுகளிலிருந்து கடன் அல்லது நிதி உதவிகள் கிடைத்துள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் கடன் அல்லது நிதி உதவிகளை வழங்கிய நாடுகள் மற்றும் வழங்கப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

1228/ ’11

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— மக்கள் தொடர்பு, மக்கள் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 ‘தயட்ட கிருல’ கண்காட்சிக்காக மக்கள் தொடர்பு, மக்கள் அலுவல்கள் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?